# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 24, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நீண்ட தூர இலக்கை துல்லியமாக தாக்கும் 'குஷா' ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.
   i. ஒடிஸாவை ஒட்டிய அப்துல் கலாம் தீவில் உள்ள ஏவுதளத்தில் இந்த நீண்டதூர தரை-வான் ஏவுகணையின் சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) மேற்கொண்டதாகப் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.
   ii. இது ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், போர் விமானங்கள் என வான்வெளியில் பிற நாடுகள் நடத்தும் தாக்குதல்களை முறியடிக்கும் திறன் கொண்டது.
   iii. குஷா ஏவுகணைக்கான ரேடார்கள், கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் உள்ளிட்ட அனைத்து ஆயுத அமைப்புகளும் டிஆர்டிஓ மற்றும் அதன் ஆய்வகங்களால் தயாரிக்கப்பட்டுள்ளன.

2. ஆப்பிரிக்க நாடான காங்கோ ஜனநாயகக் குடியரசில் எபோலா நோய்த்தொற்றுக்கு இதுவரை 1,031 பேர் உயிரிழந்துள்ளனர்.
   i. கடந்த மே 15 தொடங்கிய இந்த நோய்ப் பரவலில், மொத்தம் 2,473 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. தற்போது பரவிவரும் 'புண்டிபுக்யோ' வகை எபோலா தீநுண்மிக்கு அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் ஏதுமில்லை என்பதால், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிகக் குறுகிய காலத்தில் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

3. தென்மேற்கு பிரான்ஸில் காட்டுத்தீ அதிவேகமாகப் பரவி வரும் நிலையில், அட்லாண்டிக் கடற்கரையை ஒட்டியுள்ள சுற்றுலாத் தலங்கள் மற்றும் குடியிருப்புகளில் இருந்து சுமார் 20,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.
   i. போர்டியக்ஸ் நகருக்கு தென்மேற்கே லேஜ் கேப்-ஃபெரெட்டைச் சுற்றியுள்ள வனப்பகுதியில் பரவி வரும் இந்தத் தீயால், இதுவரை 2,400 ஹெக்டேர் (5,900 ஏக்கர்) நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளது.

ii. நடப்பு ஆண்டில் மட்டும் பிரான்ஸில் 12,500-க்கும் மேற்பட்ட காட்டுத்தீ சம்பவங்கள் பதிவாகி, சுமார் 44,000 ஹெக்டேர் நிலப்பரப்பு பாதிக்கப்பட்டுள்ளதாக அரசு தரவுகள் தெரிவிக்கின்றன.

4. 2027 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி ஆட்டம், அடுத்த ஆண்டு ஜூன் 9 முதல் 13-ஆம் தேதி வரை, லண்டனில் உள்ள தி ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளதாக ஐசிசி அறிவித்தது.

i. இந்த மைதானத்தில் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி ஆட்டம் நடைபெறவுள்ளது, இது 2-ஆவது முறையாகும். கடந்த 2023-ஆம் ஆண்டு இறுதி ஆட்டம் இங்கு நடைபெற்றபோது, ஆஸ்திரேலியா 209 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வென்று சாம்பியன் ஆனது.

ii. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் அடுத்த 3 இறுதி ஆட்டங்களை நடத்துவதற்கான வாய்ப்பை, இங்கிலாந்து கடந்த ஆண்டு பெற்றது. அதன்படி, 2027, 2029, 2031 ஆகிய ஆண்டுகளின் இறுதி ஆட்டங்கள், அந்நாட்டிலேயே நடைபெறவுள்ளன. ஏற்கெனவே, 2021, 2023, 2025 ஆகிய ஆண்டுகளின் போட்டிகளும் இங்கிலாந்திலேயே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

5. ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் 23- ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் கோலாகலமாக தொடங்கின.

i. இந்திய நேரப்படி நள்ளிரவு 12.30 மணிக்கு சிளாஸ்கோவின் ஓ.வி.ஓ ஹைட்ரோ மைதானத்தில் அரங்கேறிய தொடக்க நிகழ்ச்சியில், ஸ்காட்லாந்து சார்ந்த இசை, கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

ii. போட்டியில் பங்கேற்றுள்ள 74 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகளும் மைதானத்தில் அணி வகுத்தனர். இந்திய தரப்பில், பளு தூக்குதல் வீராங்கனை மீராபாய் சானு தேசியக் கொடியை ஏந்தி, அணிவகுப்புக்கு முன்னிலை வகித்தார். காமன்வெல்த் போட்டிக்கான பேட்டனை, குத்துச்சண்டை வீராங்கனை லவ்லினா போர்கோஹெய்ன் ஏந்தி வந்தார்.

iii. நிகழ்ச்சியில், அரசி கமிலாவுடன் கலந்துகொண்ட பிரிட்டன் அரசர் சார்லஸ், 23-ஆவது காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கியதாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

6. அஸ்ஸாம் மாநிலத்தில் மழை வெள்ளத்துக்கு மேலும் 10 பேர் உயிரிழந்ததையடுத்து, உயிரிழந்தோர் எண்ணிக்கை 41 -ஆகஉயர்ந்துள்ளது.

   i. அஸ்ஸாம் மாநிலத்தில் மேக வெடிப்பு உள்ளிட்ட காரணங்களால் பெய்த பலத்த மழையால், அந்த மாநிலத்தில் பல முக்கிய ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. சிவசாகர், சராய்தேவ், தேமாஜி, திப்ரூகர், கோலாகாட், ஹோஜாய், காம்ரூப், கர்பி அங்லாங், நாகோன் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 6.53 லட்சத்துத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, சிவசாகர் மாவட்டம் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த மாவட்டத்தில் மட்டும் அதிகபட்சமாக 4 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சிவசாகர் மாவட்டத்தில் தேசாங், திகோவ் ஆறுகளில் அபாய அளவைத் தாண்டி வெள்ளம் ஓடுகிறது. கோலாகாட்மாவட்டத்தில் தன்சிரி ஆற்றங்கரையோரத்தில் உடைப்பு ஏற்பட்டு வெள்ளம் ஊருக்குள் புகுந்தது. இதைத் தொடர்ந்து, அங்கு மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

7. உச்சநீதிமன்றத்தில் 96,000-க்கும் அதிகமான வழக்குகள் தேக்கமடைந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

   i. நீதிமன்றங்களில் தேக்கமடைந்துள்ள வழக்குகள் குறித்து, நாடாளுமன்ற மாநிலங்களவையில் உறுப்பினர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு, மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், தேசிய நீதித் துறை தரவுகளை அடிப்படையாக வைத்து எழுத்துபூர்வமாக பதிலை தாக்கல் செய்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது:

      - நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் 5 கோடியே 64 லட்சம் வழக்குகள் தேக்கமடைந்துள்ளன. இதில் உச்சநீதிமன்றம், 25 உயர்நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களும் அடங்கும்.
      - உயர்நீதிமன்றங்களில் மட்டும் 30 ஆண்டுகளுக்கும் கூடுதலாக 80,660 வழக்குகள் தேக்கமடைந்துள்ளன.
      - உச்சநீதிமன்றத்தை பொறுத்தவரை 96,000-க்கும் மேற்பட்ட வழக்குகள் தேக்கமடைந்துள்ளன. அதில் 26 வழக்குகள் 30 ஆண்டுகளுக்கும் மேலாகவும், 558 வழக்குகள் 20 ஆண்டுகளுக்கும் மேலாகவும் தேக்கமடைந்துள்ளன.10,000-க்கும்மேற்பட்ட வழக்குகள், 10 ஆண்டுகளுக்கும் மேலாக விசாரணையில் உள்ளன.

8. ருமேனியா நாட்டுக்கு இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சென்றடைந்தார்.
   i. இதன்மூலம் ருமேனியாவுக்கு கடந்த 30 ஆண்டுகளில் பயணித்த முதல் இந்திய குடியரசுத் தலைவர் என்ற பெருமையைப் பெற்றார்.
   ii. பயணத்தின் ஒரு பகுதியாக ருமேனியா அதிபர் நிகுசர் டான், இடைக்கால பிரதமர் இலிபோலோஜன் உள்ளிட்ட தலைவர்களை அவர் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.
   iii. ருமேனியா-இந்தியா நாடாளுமன்ற நட்புக் குழு, வணிகக் கூட்டமைப்பு மற்றும் இந்திய வம்சாவளியினர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.
   iv. தென்-கிழக்கு ஐரோப்பாவின் மிகப்பெரும் நாடான ருமேனியா உக்ரைன், மால்டோவா, ஹங்கேரி, செர்பியா மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகளுடன் எல்லையை பகிர்கிறது.
   v. அந்நாட்டில் 10,000 தொழிலாளர்கள் உள்பட 13,000 இந்தியர்கள் வசிக்கின்றனர்.
   vi. மூன்று நாடுகள் அரசு முறைப் பயணத்தின் முதல் கட்டமாக ஜூலை 19, 20 ஆகிய தேதிகளில் மால்டோவா சென்ற திரௌபதி முர்மு அந்நாட்டு அதிபர் மாயா சாண்டுவை சந்தித்தார்.
   vii. அப்போது வர்த்தகம், முதலீடு மற்றும் விநியோகச் சங்கிலியை மேம்படுத்த இந்தியா-மால்டோவா ஒப்புக்கொண்டதாக அவர் தெரிவித்தார்.
   viii. அதன்பிறகு ஜூலை 21,22 ஆகிய தேதிகளில் மாசிடோனியாவுக்குச் சென்ற அவர் அதிபர் கோர்டானா சில்ஜனோவ்ஸ்கா டாவ்கோவாவுடன் சேர்ந்து மகாத்மா காந்தியின் மார்பளவு சிலையை திறந்துவைத்தார்.

9. இந்தியாவில் சாலை விபத்துகளால் 2025-ஆம் ஆண்டில் நிகழ்ந்த 5.13 லட்சம் சாலை விபத்துகளில் 1.83 லட்சம் பேர் உயிரிழந்ததாக நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது.
   i. ஒரு மணி நேரத்துக்கு 21 பேர் சாலைவிபத்துகளில் உயிரிழப்பதாகவும் மத்திய அரசு தெரிவித்தது.
   ii. மத்திய சாலை விபத்துகள், எத்தனால் கலப்பு பெட்ரோல், நெடுஞ்சாலைகள் தொடர்பாக சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி மக்களவையில் அளித்த எழுத்துபூர்வ பதிலில்

தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

- ஒவ்வொரு மணி நேரமும் சராசரி 59 சாலை விபத்துகள் நிகழ்கின்றன. இதில் 21 பேர் உயிரிழக்கின்றனர். ஒட்டுமொத்தமாக 2025-ஆம் ஆண்டில் நிகழ்ந்த 5.13 லட்சம் சாலை விபத்துகளில் 1.83 லட்சம் பேர் உயிரிழந்தனர்.

iii. தமிழ்நாட்டில் அதிக விபத்துகள்:

- மாநிலங்களைப் பொறுத்த வரை தமிழ்நாட்டில் அதிகபட்சமாக 71,387 விபத்துகள் பதிவாகியுள்ளன. உத்தர பிரதேசத்தில் அதிகபட்சமாக 27,550 பேர் உயிரிழந்தனர்.

iv. தடுப்பு நடவடிக்கைகள்:

- கல்வி, பொறியியல் (சாலைகள் மற்றும் வாகனங்கள்), அமலாக்கம் மற்றும் அவசர சிகிச்சை ஆகிய 4 தூண்களின் கீழ் சாலை விபத்துகளை தடுப்பதற்கான கொள்கையை மத்திய அரசு வடிவமைத்துள்ளது.

v. எத்தனால் பெட்ரோலால் பாதிப்பில்லை:

- இ15+ எத்தனால் பெட்ரோல் 3.5 ஆண்டுகளுக்கு மேலாகவும் இ19-20 எத்தனால் பெட்ரோல் 2.5 ஆண்டுகளுக்கு மேலாகவும் பயன்பாட்டில் உள்ளது. பல்வேறு தரச் சோதனைகளுக்குப் பிறகு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறையுடன் இணைந்து எத்தனால் கலப்பு பெட்ரோல் (இபிபி) திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. பிரேஸில் மற்றும் பிற நாடுகள் எத்தனால் கலப்பு பெட்ரோலை பல ஆண்டுகளாகப் பயன்படுத்தி வருகின்றன. இந்தியாவில் இபிபி திட்டம் 2001-இல் சோதனை முறையில் அறிமுகமானது. இ5 எத்தனால் பெட்ரோல் 2006-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2013-14 வரை பெட்ரோலில் 1.53 சதவீதம் எத்தனால் கலக்கப்பட்டது. அதன் பிறகு தேவைக்கேற்ப படிப்படியாக இதன் அளவு அதிகரிக்கப்பட்டது.
- எனவே, எத்தனால் கலப்பு வாகனங்களின் பெட்ரோலால் என்ஜின்கள், பயணிக்கும் தூரம் பாதிப்பதாக சமூக வலைதளங்களில் வெளியான தகவல்களில் உண்மையில்லை.

vi. 4,809 கி.மீ. சாலை அமைப்பு:

- நாடுமுழுவதும் 4809 கி.மீ தொலைவுக்கு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 5,580 கி.மீ. தூரத்துக்கு சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என அமைச்சரின் எழுத்துபூர்வ பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.